**<u>செய்தியாளர் அழைப்பு</u>**

# ஜே.ஈ.ஈ தேர்வுக்கான பயிற்சித் திட்டம் (JEE Advanced Training Programme) தொடக்க விழா

### இடம் : அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை, , சென்னை

### நாள் : 21.04.2023 மாலை 4:30 மணி

தமிழ்நாட்டில் பள்ளியிறுதியாண்டு முடித்த மாணவர்கள் அனைவரையும் அடுத்தக் கட்டமாக உயர்கல்விக்கு அனுப்புவதை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு அரசு 'நான் முதல்வன்' திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இந்தியாவின் சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றான ஐ.ஐ.டியில் சேர்வதற்கான அகில இந்திய அளவிலான ஜே.ஈ.ஈ தேர்வை எதிர்கொள்வதற்கென பயிற்சித் திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் தொடக்க விழா ஏபரல் 21, 2023 அன்று மாலை 4:30 மணிக்கு சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறுகிறது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் விழாவில் பங்கேற்று மாணவர்களுக்கு கையடக்கக் கணினிகளை வழங்கி வாழ்த்துரை ஆற்றுகிறார்.

விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களும் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

பள்ளிக் கல்வித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திருமிகு. காகர்லா உஷா இ.ஆ.ப. முன்னிலையில் தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் சங்கத்தின் உறுப்பினர் செயலர் திரு. இரா. சுதன், முதன்மைக் கல்வி அலுவலர் திரு. மார்ஸ் உட்பட பள்ளியின் தலைமையாசிரியர், ஆசிரியர்கள்,

மாணவர்கள் உட்பட பள்ளிக் கல்வித் துறையின் உயர் அலுவலர்களும் பங்கேற்கிறார்கள்.

நிகழ்விற்கு தங்கள் செய்தி நிறுவனத்தில் இருந்து செய்தியாளரை அனுப்பி செய்தி சேகரிக்குமாறு வேண்டுகிறோம்

ஆணையர்
பள்ளிக் கல்வி

* * * * *